## *25*

# பாவத்தின் பிரச்சனை

## ரோமர் 3:23; 6:23

*"எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி" (ரோமர் 3:23).*

*யாரேனும் ஒருவர், தாம் இழந்துபோகப்பட்டிருப்பதை அறியவில்லை என்றால் அவர் எப்படி இரட்சிக்கப்பட விரும்ப முடியும்? பாவம் நிலவுவதில்லை என்று எவரொருவரும் எப்படிக்கூற முடியும்?*

### ஒரு பிரதான ஆய்வுக்கருத்து

பாவம் என்பது வேதாகமத்தின் முக்கிய விஷயங்களில் ஒன்றாக உள்ளது. மக்கள் பாவத்தைப் பற்றி அறிய வேண்டும் என்பதற்காகத் தேவன் மோசேயினிடத்தில் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார்: "இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை" (ரோமர் 3:20). "தேவன் ஒருவரே யன்றி பாவங்களை மன்னிக்கத்தக்கவன் யார்?" என்று கேட்டபோது யூதர் சரியானவனாகவே இருந்தார் (மாற்கு 2:7; லூக்கா 5:21). மனிதகுலத்திற்குப் பாவத்தின் பிரச்னை என்பது ஏறிக்கடந்து வெல்ல இயலாததாக உள்ளது! பாவம் மூடப்பட முடியாது; அது மன்னிக்கப்பட மாத்திரமே முடியும். பாவம் என்றால் என்ன என்பதை நாம் புரிந்துகொள்ளும்போது, நாம் திகைப்படைகிறோம் - இந்தத் திகைப்பு, அதை மன்னிப்பதைத் தேவன் ஏன் கடினமானதாகக் கருதுகிறார் என்பதால் அல்ல, ஆனால் அதைச் செய்வது அவசியம் என்று அவர் கருதுவது ஏன் என்பதாலேயே ஏற்படுகிறது! பாவத்தில் இருக்கும் மனிதன் இரட்சிக்கப்பட முடியுமா? "பரிசுத்தராகவும்" பாவத்திலிருந்து தூரத்தில் விலகியும் இருக்கிற தேவன் பாவத்தை மன்னிக்க முடியுமா? (ஏசாயா 6:3; வெளிப்படுத்தின விசேஷம் 4:8ஐக் காணவும்). அவர் புலன்கடந்த பரிசுத்த தன்மையுடன் இருக்கிறார். இந்த நீதியுள்ள தேவன் சிலுவையின் மூலமாக மாத்திரமே நம்மை மன்னிக்க முடியும்.

### பிரபஞ்ச விளைவுகள்

ஆதாமும் ஏவாளும் "பழத்தை ஒருகடி மாத்திரமே" எடுத்துக்கொண் டனர். அதுவே எடுக்கப்பட்ட எல்லாமுமாகும்! மனிதகுலத்தைப் பாவத்தில்

தள்ள கொலை, ஒழுக்கவீனம், திருட்டு, திட்டுதல் அல்லது தவறாகப் பயன்படுத்துதல் போன்ற எதுவும் தேவைப்படவில்லை. ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபோது, பரலோகத்திலும், நரகத்திலும் மற்றும் பூமியிலும் ஒவ்வொரு விஷயமும் மாறிற்று! தேவனுடனும், மனிதனுடனும் மற்றும் சாத்தானுடனும் எல்லாமும் மாறுபட்டிருந்தது! மனிதனுக்குள்ளாக ஒவ்வொரு விஷயமும் மாறிற்று. அவன் நித்தியத்திற்கும் தேவனிடத்தில் இருந்து அந்நியப்பட்டான் மற்றும் தனது துணையிடத்தில் இருந்து தூரத்தில் இருந்தான். மனிதகுலம் ஒருக்காலும் மீண்டும் தன் சுயநிலைக்கு வரப்போவதில்லை. ஆதாமிடத்தில் தேவன், "நீ எங்கே இருக்கிறாய்?" என்று கேட்டதில் (ஆதியாகமம் 3:9) வியப்பு எதுவும் இல்லை. ஆதியாகமம் 2 மற்றும் 3ம் அதிகாரங்களை வாசித்து நடுங்குங்கள்! மனிதன் விழுந்துபோன, ஆக்கினைக்குள்ளான பாவியாக இருக்கிறான்.

இந்த வரலாற்றிற்கு "ஒரு கடி" என்பதைக் காட்டிலும் அதிகமானது உள்ளது. ஆதாமும் ஏவாளும் தங்கள் வாழ்வில் சாத்தான் நுழைவதை அனுமதித்தனர். அவர்கள் சாத்தான் கூறுவதைக் கவனித்து, அவனை நம்பி அவனுக்குக் கீழ்ப்படிந்தனர். அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமற் போயினர். தேவன் தேவனாகவே இருக்கிறார், படைப்பின் உரிமையினால் மனிதன் அவருக்கு உரியவனாக இருக்கிறான். ஆதாமும் ஏவாளும் தேவனு டைய அதிகாரத்திற்கு எதிராகக் கலகம் செய்தனர்.

ஒரு நபர் தனது சொந்த இச்சைகளினால் புறம்பே வழிநடத்தப்படும் போது மாத்திரமே சோதிக்கப்பட முடியும் (யாக்கோபு 1:14). அவன் புறம்பாக பாவம் செய்வதற்கு முன்னர் தனக்குள்ளாகப் பாவம் செய்கிறான். பாவம் என்பது சுயமாகத் தேர்ந்துகொள்வதில் முதலிடம் பெறுவதாக உள்ளது. அது தேவனைத் தேவனாக இருக்க அனுமதி மறுத்தலாக உள்ளது; அது மனிதன் மனிதனைவிட அதிகமாக இருக்க முயற்சித்தல் ஆகிறது. பாவம் என்பது, நாம் தேவனைவிட அதிகமாக அறிந்துள்ளதாக அல்லது அவரைவிட மேன்மையாக அறிந்துள்ளதாக நாம் நினைக்கிறதாக உள்ளது.

மனிதன் தேவனுடன் கொண்டிருந்த உறவு இப்போது முறிக்கப்பட்டு, காட்டிக்கொடுக்கப்பட்டு, அழிக்கப்பட்டது. பாவத்தைத் தேவன் பொருட்படுத்துகிறார். உண்மைநிலையில், மனிதன் பாவம் செய்கிறபோது அவன் தனக்குத் தானே சொந்தமான கடவுளாக முடிவுசெய்கிறான்.

தேவனுக்குப் புறம்பே, பாவிகள் யாவரும் தங்கள் பாவங்களில் மரித்தவர்களாக இருக்கின்றனர் (எபேசியர் 2). பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23). நமது பாவங்கள் மன்னிக்கப்படவில்லை என்றால், நாம் தேவனிடத்தில் இருந்து நித்தியத்திற்கும் பிரிந்தவர்களாக இருக்கிறோம் (ஏசாயா 59:2, 3). வரலாற்றில், யுத்தம், வன்முறை மற்றும் கூச்சல் குழப்பம் யாவையும் அந்த "ஒரு கடியுடன்" தான் தொடங்கின. அது நடப்பதற்கு முன்பே தேவன் அதைப்பற்றி ஆதாமிடம் கூறியிருந்தார். இருப்பினும் தேவன் இடமாற்றப்பட்டார். அதிலிருந்து சாத்தான் இந்த உலகத்திற்கு கடவுளாக, பிரபுவாக, மற்றும் பிதாவாக ஆனான் (யோவான் 8:44; 12:31; 14:30; 16:11; 2 கொரிந்தியர் 4:4).

பாவிகள் இரட்சிக்கப்படுவதற்கு அவர்கள் பாவத்தைத் தேவன் கண்ணோக்குவது போலக் கண்ணோக்க வேண்டும். பாவத்தின் பயங்கரத்தைப் பாவிகள் உணர்ந்தறியாத வரையில் மனந்திரும்புதல் வராது. தேவனுக்குப் பயப்படாத மக்கள் பாவத்திற்குப் பயப்படுவதில்லை. தேவனைப் பற்றிய பரிசுத்தமான கண்ணோட்டத்தைக் கொண்டுள்ள மக்கள் பாவத்தின் பெருங்கொடுமையை உணர்ந்தறிகின்றனர்.

தேவன் பாவத்தை வெறுக்கிறார், நாமும் அதை வெறுக்க வேண்டும்; ஆனால் மிகப்பலர், பாவத்தைப் பாவம் என்று வெறுக்காதிருப்பது கவலைக்குரியது. நாம் எவ்வளவு அதிகமாகப் பரிசுத்தமாகிறோமோ, அவ்வளவு அதிகமாகப் பாவத்தை வெறுப்போம், ஏனென்றால் அது தேவனுடனான நம் உறவுக்கு என்ன செய்கிறது என்பதை நாம் புரிந்துகொள்கிறோம்.

## நம்பிக்கையற்ற நிலையும் உதவியற்ற நிலையும்

பாவத்தில் உள்ள மனிதன் தன்னைத்தானே இரட்சிக்க இயலாது. அவன் இரட்சிப்பை ஈட்டவோ, வாங்கவோ அல்லது அதைப்பெறத் தகுதியாகவோ இருக்க முடியாது. அவன் இரட்சிக்கப்படுவதற்குப் போதுமானவற்றைத் தானே அறியவோ அல்லது அவற்றைச் செய்யவோ முடியாது. மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பதை மாத்திரமே பாவி செய்யமுடியும். அவனுக்காக வேறு எவரும் இதைச் செய்ய முடியாது.

நமது புண்படுதல்கள் அல்லது பழக்கங்கள் ஆகியவற்றிற்காக இயேசு மரிக்க வரவில்லை. அவர் நமது பாவங்களுக்காக மரித்தார் (ரோமர் 5:6, 8; 1 பேதுரு 1:18, 19). நாம் அவரிடம் வரும்போது, நாம் அவரது இரத்தத்தினால் கழுவப்படுகிறோம் (1 கொரிந்தியர் 6:11; எபிரெயர் 10:19; வெளிப்படுத்தின விசேஷம் 1:5; 7:14). இயேசு *பாவியாக்கப்படவில்லை,* ஆனால் அவர் *பாவமாக்கப்பட்டார்* (2 கொரிந்தியர் 5:14-21).

தேர்ந்துகொள்ளுதல் நம்முடையதாக உள்ளது. நாம் சிலுவையில் இயேசுவின் மூலமாக நமது பாவங்களை மன்னிக்கப் பெறலாம் அல்லது நித்தியத்திற்கும் நரகத்தில் தண்டனை நம்மீது விழப் பெறலாம்.

நமது பாவங்கள் மன்னிக்கப் பெறுவதற்கு, நாம் ஒரே ஒரு வழியை மாத்திரமே கொண்டுள்ளோம்; அவற்றை மன்னிக்க இயேசுவை நாம் அனுமதிக்க வேண்டும். அவர் இதைச் செய்வதற்கு, நாம் நமது பாவங்களில் இருந்து மனந்திரும்ப வேண்டும், அவற்றிற்கு மரிக்க வேண்டும், மற்றும் அவற்றை ஞானஸ்நானத்தில் கழுவ வேண்டும். (நடபடிகள் 2:38; 22:16; ரோமர் 6:1-7; 1 பேதுரு 2:24 ஆகியவற்றை காணவும்.)

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*